சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **153 / 2016**

பெயர்: வடிவேல் பி.வா.சா.6 தேதி **18.03.2025**

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் திருச்சிராப்பள்ளி பாபு ரோட்டில் குடியிருந்து வருகிறேன். அந்த முகவரிக்கு தான் எனக்கு அழைப்பாணை வந்தது. நான் இவ்வழக்கில் தரப்பினர் ஆனால் எந்தவித கட்சியும் எடுக்கவில்லை என்றால் எனது அண்ணனிடம் (கோபால்) வழக்கை ஒப்படைத்துவிட்டேன். நான் மேற்படி எனது அண்ணனிடம் வழக்கை நடத்துவதற்காக எழுத்துபூர்வமாக ஆவணம் எதுவும் பிறப்பித்துக்கொடுக்கவில்லை. எனது அண்ணன் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்வையிடவில்லை. மேற்படி வழக்கு சொத்து யார் யாரிடம் உள்ளது, யார் அனுபவம் செய்து வருகிறார்கள், இந்த சொத்து சம்பந்தமாக வேறு வழக்குகள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் மேலே சொன்ன வேறு வழக்குகளில் நான் தரப்பினர் தான். எனது தாயார் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எத்தனை உயில் தயாரித்திருப்பார் என்றால் 4 உயிலை எனது தாயாரும் 1 உயிலை எனது தகப்பனாரும் எழுதினார்கள். எனக்கு எழுதப்படிக்க தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் 23.06.93ம் தேதியிட்ட உயில் சாசனத்தின் சான்று நகலானது இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான்.ஆனால் பின்னர் எனது அப்பா மேற்படி உயிலை மாற்றி எனது அண்ணனுக்கு எழுதி வைத்துவிட்டார். மேற்படி 23.06.93ம்தேதியிட்ட சான்று நகல் பி.வா.சா.ஆ.33 என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.30 உயில் சாசனத்தில் 23.06.93ம் தேதியிட்ட உயில் சாசனம் மற்றும் எற்கனவே வழக்கு சொத்து சம்பந்தமாக எழுதப்பட்ட மூன்று உயில்களும் ரத்து செய்யப்பட்டதாக எவ்வித குறிப்புகளும் இல்லை என்றால் சரிதான். ஒரு உயில் சாசனம் நடைமுறையில் உள்ள நிலையில் அதே சொத்துக்காக மீண்டும் உயில் எழுதும்பட்சத்தில் இரண்டாவது உயிலுக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது தகப்பனார் எப்பொழுது இறந்தார் என்றால் 2009ம் வருடம் இறந்தார். எனது தகப்பனார் இறப்பிற்கு பின்னிட்டு நான், எனது தாயார் மற்றும் இவ்வழக்கின் அனைவரும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். 2004ம் ஆண்டு எனது தாயார் ஒரு உயிலை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

2.எனது சகோதரர் கோபால் என்பவர் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை ரத்து செய்துவிட்டு தன்னுடைய பெயருக்கு அனைத்து சொத்துக்களும் பாத்தியப்பட்டது என்று வழக்கு நடத்தி வரும் விவரம் தெரியுமா என்றால் அவ்வாறு எனது சகோதரர் மாற்றம் எதுவும்

செய்யவில்லை. எனது சகோதரர் கோபால் வருவாய் துறை ஆவணங்களை அவர் பெயருக்கு மாற்றிக்கொண்டு தாவா வழக்கு சொத்துக்கள் அனைத்துமே தனக்கு தான் சொந்தம் என்று வழக்காடி வருகிறார் என்றால் சரியல்ல. 2019ம் வருடம் பாப்பம்மாள் என்பவர் உயில் எழுதி வைத்தாக கூறி என்னுடைய பாகத்தையும் சேர்த்து கோபால் என்பவர் மோசடியாக ஆவணம் தயார் செய்துக்கொண்டார் என்றால் அவ்வாறு தயார் செய்ய இயலாது, நானும் ஒரு பாகஸ்தர் தான். கோபால் என்னை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் முத்து, ஸ்ரீனிவாசன், தனம் ஆகியோர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்து கட்சி செய்து வருகிறார் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் அதனை கோபால்-யிடம் தான் கேட்கவேண்டும். வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும் கோபால் அவர் பெயருக்கு எழுதிக்கொண்டவிவரம் தெரியுமா என்றால் அவ்வாறு எழுத இயலாது.

3. கோபால் எல்லா சொத்துக்களையும் அவரது பெயருக்கு மாற்றம் செய்தது சம்பந்தமாக வருவாய் துறையினரிடம் இருந்து அறிவிப்பு வர அதற்கு வாதியானவர் ஆட்சேபணை கொடுத்துள்ளார் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.30, 31 ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வாரிசுதாரர்கள் அனைவருக்கும் துரோகம் செய்து போலியான ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.30,31 ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆவணங்கள் குறித்து எதுவும் தெரியாததால் அது குறித்து நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கை நான் நடத்தியிருந்தால் கோபால் செய்த அனைத்து விசயங்களும் தெரிந்துவிடும் என்பதற்காக நீதிமன்றத்திற்கு என்னை வரவிடாமல் கட்சி செய்துள்ளார் என்றும் அதனால் தான் எனக்காகவும் சேர்த்து வக்காலாத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.